Puducherry / Regional Bulletin / Tamil / 18.10hrs / 31-8-2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி – புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 31-08-2026 – திங்கள்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள் :

ஆடை வடிவமைப்பு, மற்றும், உற்பத்தித் துறையில், உலக சக்தியாக மேம்படும் உள்ளாற்றல் இந்தியாவிற்கு இருப்பதாக, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு கூறியுள்ளார்.

2 நாள் பயணமாக இன்று, கிர்கிஸ்தான் சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

தூத்துக்குடியில், அரசு – தனியார் ஒத்துழைப்புத் திட்டமாக, ஆயிரத்து 600 மெகாவாட் திறன் கொண்ட சூப்பர் கிரிட்டிகல் அனல் மின்நிலையம் அமைக்கப்படும் என, தமிழக முதலமைச்சர் திரு. விஜய் அறிவித்துள்ளார்.

மேகதாதுவில் அணை கட்டுவதை கண்டித்து, இன்று புதுச்சேரி சட்டமன்றத்தில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி கொண்டு வந்த தனிநபர் தீர்மானம், அரசுத் தீர்மானமாக ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

முர்மு (16)

ஜவுளி மற்றும் ஆடை உற்பத்தித் துறை இந்திய கலாச்சார மரபுகளின் முக்கிய பகுதியாக மட்டுமின்றி, கோடிக்கணக்கிலான மக்களுக்கு வாழ்வாதாரம் அளிக்கும் துறையாகவும் திகழ்வதாக, குடியரசு தலைவர் திருமதி. திரவுபதி முர்மு கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், நவநாகரிக ஆடை தொழில்நுட்பம் குறித்த தேசிய கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் அவர் உரையாற்றினார். ஆடை தொழில்நுட்பம் பயிலும் மாணவர்கள், நாட்டின் கலாச்சார வேர்களைப் பற்றி நிற்கும் அதே வேளை, உலகப் பார்வையுடன் செயல்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார். தேசிய ஆடை தொழில்நுட்ப கழகத்தில் பயின்றவர்கள், இந்தியாவின் ஜவுளிப் பாரம்பரியத்தை தற்போது உலக அளவில் பரப்பி வருவதையும், குறிப்பாக ஆடை வடிவமைப்புத் துறையில், பெண்களின் பங்கேற்பு அதிகம் என்பதையும், குடியரசுத் தலைவர், தமது உரையில் சுட்டிக் காட்டி பாராட்டினார். இத்துறையில், உலக சக்தியாக மேம்படும் உள்ளாற்றல், இந்தியாவிற்கு இருப்பதால் இளைஞர்கள் இதை நன்குப் பயன்படுத்திக் கொண்டு, விக்சித் பாரத் இலக்கை எட்டுவதில், முக்கிய பங்களிக்க வேண்டும் என, அவர் கேட்டுக் கொண்டார்.

மோடி – பயணம் -1 (12)

2 நாள் பயணமாக கிர்கிஸ்தான் சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று பிஷ்கேக் நகரில், கிர்கிஸ்தான் அதிபர் திரு. சாதைர் ஜாபரோவை சந்தித்துப் பேசினார். ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின்,

உச்சி மாநாட்டிற்கு இடையே, ஈரானிய அதிபர் திரு. மசூத் பெஜஷ்கியான், ஆர்மீனியா பிரதமர் திரு. நிகோல் பாஷின்யான் ஆகியோரையும், இருதரப்பு ரீதியில் சந்தித்தார். பொருளாதாரம், பாதுகாப்பு, கல்வி, அறிவியல் – தொழில்நுட்பம், கலாச்சாரம் உள்ளிட்ட துறைகளில், இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்கான வழிவகைகள் குறித்து, இந்த சந்திப்புகளின் போது, விவாதிக்கப் பட்டது. மேற்காசிய நிலவரம் உட்பட, பிராந்திய, மற்றும், உலக அளவிலான பிரச்சனைகள் குறித்தும், கருத்துக்களையும் தலைவர்கள் பரிமாறிக் கொண்டனர். பிரதமர் திரு. நரேந்திர மோடியின் கிர்கிஸ்தான் பயணம் குறித்து கூடுதல் விவரங்கள்…

(வாய்ஸ்)

மோடி – பயணம் - 2 (13)

(வாய்ஸ்)

கிர்கிஸ்தான் தலைநகர் பிஷ்கேக்கில் உள்ள இந்திய சமூகத்தினரை, இன்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி சந்தித்துக் கலந்துரையாடினார். பிஷ்கேக்கில உள்ள மகாத்மா காந்தி நினைவகத்தில், அவர் மலரஞ்சலி செலுத்தினார். நாளை, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் 26ஆவது உச்சி மாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி உரையாற்ற இருக்கிறார். நாடோடி மக்களுக்கான 6ஆவது உலக விளையாட்டுப் போட்டிகளின் துவக்க விழாவிலும் அவர் பங்கேற்கிறார். ஷாங்காய் ஒத்துழைப்பு பிராந்தியத்தை, தீவிரவாதம் மற்றும் பிரிவினைவாதம் இல்லாத பிராந்தியமாக மேம்படுத்துவதிலும், பிராந்தியத்தின் பாதுகாப்பு,

போக்குவரத்துத் தொடர்புகள், மற்றும், புதிய வாய்ப்புகளை வலுப்படுத்துவதிலும், உறுப்பு நாடுகளுடன் இணைந்து, இந்தியா செயல்படும் என, கிர்கிஸ்தான் பயணத்திற்கு முன்னர் வெளியிட்ட புறப்பாட்டுச் செய்தியில், பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

செமிகான் இண்டியா (16)

நாட்டில், கணிப்பொறிச் சில்லுகளுக்கான உற்பத்திச் சூழலை, மேம்படுத்தும் நோக்கில், மொத்தம் 1.27 லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் கூடிய, 2ஆம் கட்ட செமிகான் இண்டியா திட்டத்தை, மத்திய அரசு இன்று, அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் 6 முக்கிய தூண்கள் குறித்த அரசிதழ் அறிவிக்கைகளை, மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், புதுடெல்லியில் இன்று வெளியிட்டார். பின்னர் அவர், செய்தியாளர்களிடம் பேசுகையில் வரவிருக்கும் ஆண்டுகளில், உலக அளவிலான செமி கண்டக்டர் சந்தையில், இந்தியாவின் பங்கை 10 சதவிகிதமாக உயர்த்தவும், செமி கண்டக்டர் விநியோகச் சந்தையில், இந்தியா முக்கிய பங்களிப்பதை உறுதிப்படுத்தவும், இத்திட்டத்தினால் ஏதுவாகும் என்றார். திட்டத்தின் முதல் கட்டத்தில், பணிகள் எவ்வளவு வேகாக நிறைவேறின என்பதை, தொழில்துறையினர் நன்றாகவே கவனித்து இருப்பதாகவும், செமி கண்டக்டர் உற்பத்திக்கு உகந்த கொள்கைகளும், திறன்களும்,

எளிமையான வர்த்தக நடைமுறைகளும், இந்தியாவில் இருப்பதே நாட்டில் இத்துறையின் வேகமான வளர்ச்சிக்குக் காரணம் என்றும், அவர் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு மின்சாரம் (9)

தூத்துக்குடியில், 20 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு – தனியார் ஒத்துழைப்புத் திட்டமாக, ஆயிரத்து 600 மெகாவாட் திறன் கொண்ட சூப்பர் கிரிட்டிகல் அனல் மின்நிலையம் அமைக்கப்படும் என, தமிழக முதலமைச்சர் திரு. விஜய் அறிவித்துள்ளார். இன்று தமிழக சட்டமன்றத்தில், இது குறித்து தாமாகவே முன்வந்து அறிக்கை ஒன்றை வெளியிட்ட அவர், மாநிலத்தில், தடையற்ற மின்சாரம் வழங்க ஏதுவாக, மின்துறை முழுமையாக புதுப்பிக்கப்படும் என்றும், புதிய மின் தடங்கள், மின்விநியோக நிலையங்கள், மற்றும், இதர கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

புதுச்சேரி – மீனவர் (12)

புதுச்சேரியில், பிரதமரின் மத்ஸ்ய சம்பதா திட்டத்தின் கீழ், நல்லவாடு மீன் இறக்கு மையம் உள்ளிட்ட பல்பரிமாண மீனவள உள்கட்டமைப்புத் திட்டங்களை, மத்திய மீன்வளத் துறை அமைச்சர், திரு. ராஜீவ் ரஞ்சன் சிங், இணையமைச்சர் பேராசிரியர் S.P. சிங் பகேல் ஆகியோர், நாளை தொடக்கி வைக்க உள்ளனர். நீலப் பொருளாதாரத்தின்

ஒரு பகுதியாக, கூட்டுறவு முறையில் கடற்பாசி வளர்க்கும் திட்டங்களுக்கு ஏற்ற திறன்களை உருவாக்குவது குறித்து, மாநாடு ஒன்றையும், மத்திய அமைச்சர்கள் தொடக்கி வைக்க உள்ளனர். கருவடிக்குப்பத்தில் உள்ள, காமராஜர் மணி மண்டபத்தில், துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் தலைமையில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி முன்னிலையில், நடைபெறும் இவ்விழாவில், சட்டப்பேரவைத் தலைவர் திரு. அன்பழகன், மாநில மீன்வளத் துறை அமைச்சர் திரு. மல்லாடி கிருஷ்ணாராவ் மற்றும் இதர அமைச்சர்களும் பங்கேற்க உள்ளனர்.

மேகதாது -1 (4)

மேகதாதுவில் அணை கட்டுவதான கர்நாடக அரசின் உத்தேசத்தைக் கண்டித்தும், அணை கட்டுவதைத் தடுக்கக் கோரியும், இன்று புதுச்சேரி சட்டமன்றத்தில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி கொண்டு வந்த தனிநபர் தீர்மானம், அரசுத் தீர்மானமாக ஏற்கப்பட்டு, ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது. இது குறித்து கூடுதல் விவரங்கள்...

(வாய்ஸ்)

மேகதாது - 2 (18)

(வாய்ஸ்)

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்புக்கு மாறாக, மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்டுவதை மத்திய அரசு அனுமதிக்கக் கூடாது என்று, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டமன்றத்தில், தீர்மானத்தை

முன்மொழிந்து பேசுகையில் கூறினார். புதுச்சேரி உள்ளிட்ட காவிரிப் பாசன மாநிலங்களின் முன் இசைவு பெறாமல், கர்நாடக அரசு மேகதாதுவில் அணை கட்டுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று, அவர் வலியுறுத்தினார். புதுச்சேரியின் காரைக்கால் பகுதி விவசாயிகளின் நலனை பாதுகாக்கும் வகையில், காவிரி நீரில் புதுச்சேரிக்கு உரிய பங்கை கோரிப்பெற, நிர்வாக ரீதியிலும், சட்ட ரீதியிலும், புதுச்சேரி அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு, சட்டப்பேரவை முழு ஆதரவு அளிக்கும் என்றும், தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டது. இத்தகைய தீர்மானத்தை புதுச்சேரி சட்டமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும் என, திமுக சட்டமன்ற உறுப்பினர் திரு. கார்த்திகேயன், சுயேட்சை உறுப்பினர் திரு. நேரு, லட்சிய ஜனநாயக கட்சித் தலைவர் திரு. ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் ஆகியோர், ஏற்கனவே பேரவைத் தலைவரிடம் வலியுறுத்தி இருந்த நிலையில், இன்று முதலமைச்சர் கொண்டுவந்த தீர்மானம், அரசுத் தீர்மானமாக நிறைவேற்றப் பட்டது. இதைத் தொடர்ந்து, பேரவை காலவரையின்றி ஒத்தி வைக்கப்படுவதாக, சபாநாயகர் திரு. அன்பழகன் அறிவித்தார்.

புதுச்சேரி சிவக்கொழுந்து (18)

புதுச்சேரியில், சுமார் 38 ஆயிரம் குடும்ப அட்டைகள் குடிமைப் பொருள் வழங்கல் துறையால் ரத்து செய்யப்பட்டதாக கூறப்படுவது உண்மை அல்ல என்று, குடிமைப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. சிவக்கொழுந்து கூறியுள்ளார். இன்று சட்டப் பேரவையில் தமது

துறைகள் தொடர்பான மானியக் கோரிக்கை விவாதங்களுக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு கூறினார். ரேஷன் அட்டை காலாவதியானதாக கண்டறியப்படும் நிலையிலோ, அல்லது, அட்டைதாரர் தாமாகவே முன்வந்து அட்டையை ஒப்படைக்கும் போதுதான், அட்டை ரத்து செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார். பிரதமரின் கரீப் கல்யாண் அன்ன யோஜனா திட்டப் பயனாளிகளுக்கு, மாதாந்திர உணவு மானியத்தை CBDC பணப்பை மூலமாக வழங்கும் நடைமுறை புதுச்சேரியில் அமலுக்கு வந்திருப்பதாகவும், இதுவரை, 1 லட்சத்து 65 ஆயிரத்து 644 குடும்ப அட்டைகள் இத்திட்டத்தில் இணைக்கப் பட்டுள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார். இதுவரை eKYC பதிவு செய்யாத பயனாளிகள், தங்களது ஆதார் அட்டை, மற்றும், ஆதாருடன் இணைக்கப்பட்ட கைபேசியுடன் அருகிலுள்ள நியாயவிலைக் கடைக்குச் சென்று, eKYC நடைமுறைகளை பூர்த்தி செய்வதன் மூலம், CBDC பணப்பை திட்டத்தில் சேர்ந்து கொள்ளலாம் என்றும் அவர் கூறினார்.

புதுவை சிவம் (6)

புதுச்சேரியில் கவிஞர் புதுவை சிவம் நினைவு நாள், இன்று அரசு சார்பில் அனுசரிக்கப்பட்டது. காமராஜர் சாலை-சித்தன்குடி சந்திப்பில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஜான்குமார், திரு. நேரு என்கிற குப்புசாமி, திரு. ஜோஸ் சார்லஸ் மார்ட்டின்,

திரு. செந்தில் குமார், திரு. அழகு என்கிற அழகானந்தம் ஆகியோர், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

வானிலை (12)

இன்று, மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தின் இதர பகுதிகள், மற்றும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. செப்டம்பர் 6ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள, தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூர் உள்ளிட்ட இடங்களில், 1 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

கப்பல் (9)

மும்பையில் உள்ள கடற்படை கட்டுமானத் தளத்தில் இன்று நடைபெற்ற விழாவில், ஆழ்கடல் நடவடிக்கைகளுக்குத் தேவையான நீர்மூழ்கி வசதிகளுடன் கூடிய, INS-Nipun என்னும் இந்தியாவின் 2ஆவது

நிஸ்டார் ரகக் கப்பல், முறைப்படி கடற்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. கடற்படைத் தலைவர் அட்மிரல் கே. சுவாமிநாதன் உள்ளிட்டோர், இதில் கலந்து கொண்டனர். நீர்மூழ்கிக் கப்பல்களை மீட்கும் திறனுடன், முற்றிலும் உள்நாட்டிலேயே வடிவமைத்து தயாரிக்கப்பட்ட புதிய கப்பலால், மேற்கு மண்டல கடற்படையின் ஆழ்கடல் செயல்பாடுகள் கணிசமாக மேம்படும் என்று, கடற்படைத் தலைவர் கூறினார்.

ராஜ்நாத் (17)

பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், நாளை, புதுடெல்லியில், 16 பொதுத்துறை பாதுகாப்பு உற்பத்தி நிறுவனங்களின் வருடாந்திர செயல்பாடுகளை மறுஆய்வு செய்கிறார். பாதுகாப்பு உற்பத்தியில், புதிய உள்நாட்டு தொழில்நுட்பங்களின் பயன்பாடு, மற்றும், இத்துறையின் ஏற்றுமதியை அதிகரிப்பது குறித்து, இந்த மறுஆய்வுக் கூட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்படும். இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ், பாரத் எலக்ட்ரானிக்ஸ், கார்டன் ரீச் பணிமனை உள்ளிட்ட பொதுத்துறை பாதுகாப்பு உற்பத்தி நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகள் இக்கூட்டத்தில் பங்கேற்க உள்ளனர். கடந்த நிதியாண்டில், இந்நிறுவனங்களின் லாபத்தில் அரசுக்குரிய ஈவுத் தொகைக்கான காசோலைகளும், இக்கூட்டத்தின் போது வழங்கப்படும். கடந்த நிதியாண்டில், பொதுத்துறை பாதுகாப்பு உற்பத்தி நிறுவனங்களின் மொத்த விற்பனை, சுமார் 1.29 லட்சம் கோடி ரூபாயாக 15.4 சதவிகித

அளவிற்கும், இந்நிறுவனங்களின் மொத்த லாபம், 15.6 சதவிகித அளவிற்கும் அதிகரித்து உள்ளது. பொதுத்துறை பாதுகாப்பு உற்பத்தி நிறுவனங்களின் ஏற்றுமதி, கடந்த நிதியாண்டில், சுமார் 151 சதவிகிதம் அதிகரித்து இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மீண்டும் தலைப்புச் செய்திகள் :

ஆடை வடிவமைப்பு, மற்றும், உற்பத்தித் துறையில், உலக சக்தியாக மேம்படும் உள்ளாற்றல் இந்தியாவிற்கு இருப்பதாக, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு கூறியுள்ளார்.

2 நாள் பயணமாக இன்று, கிர்கிஸ்தான் சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

தூத்துக்குடியில், அரசு – தனியார் ஒத்துழைப்புத் திட்டமாக, ஆயிரத்து 600 மெகாவாட் திறன் கொண்ட சூப்பர் கிரிட்டிகல் அனல் மின்நிலையம் அமைக்கப்படும் என, தமிழக முதலமைச்சர் திரு. விஜய் அறிவித்துள்ளார்.

மேகதாதுவில் அணை கட்டுவதை கண்டித்து, இன்று புதுச்சேரி சட்டமன்றத்தில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி கொண்டு வந்த தனிநபர் தீர்மானம், அரசுத் தீர்மானமாக ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

இத்துடன் இந்தச் செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS / MS / RK